பதிவு எண் : ... 6311 ★ தொலைபேசி : 51881 நிறுவியது : 1958 ★ விலை : ... காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : ஆடி 18 (2—8—68) வெள்ளி ★ வெளியூர் : ஆடி 19 (3—8—68) சனி [இதழ் : 42

ரூ. 2,337 கோடி

புதுடில்லி, ஆக. 2—

1968—69-ம் ஆண்டுத் திட்டத்திற்கான மொத்த முதலீடு ரூ. 2,337.43 கோடியாக இருக்கும்.

திட்ட முதலீடுகள் 1967—68-ல் ரூ. 2,246-கோடியாகவும், 1966—67-ல் ரூ. 2,082-கோடியாகவும் இருந்தன.

நடப்பு ஆண்டுக்கான முதலீட்டில் உணவுத் தானியக் கையிருப்புக்களைச் சேர்ப்பதற்கான ரூ. 140-கோடியும் அடங்கியுள்ளது.

நடப்பு ஆண்டுக்கான முதலீட்டில் மத்திய அரசின் பங்கு ரூ. 1.319.73 கோடியாகவும், மாநிலங்களின் பங்கு 952.33 கோடியாகவும், மத்திய நிர்வாகப் பகுதிகளின் பங்கு ரூ. 65.37 கோடியாகவும் இருக்கும்.

காங்கிரசுக் காலிகள் வெறியாட்டம்

ஊர்வலம் என்ற பெயரால் சென்னையில் காலித்தனம்

வழிவிட்டு வழி சென்று தாக்குதல் நடத்த முயற்சி; போலீசார்—பொதுமக்கள் மீது கல், சோடா புட்டிகளை வீசிக் கலவரம்

சென்னை, ஆக. 2—

சென்னையில் நேற்று காங்கிரசார், 'ஊர்வலம் — ஆர்ப்பாட்டம்' என்ற பெயரால் திட்டமிட்ட காலித்தனத்திலும், வெறிச் செயல்களிலும் ஈடுபட்டனர்.

'காங்கிரசார் ஊர்வலம் நடத்துகிறார்கள்' என்றால் காலித்தனமும், சில இடங்களைக் குறிவைத்துத் தாக்குதலும் நடைபெறுவது வாடிக்கை என்பது, நேற்றும் உறுதிப்படுத்தப்பட்டது.

ஊர்வலம் என்ற பெயரால், மவுண்ட் ரோடு காமராசர் சிலையருகிலிருந்து கிளம்பிய காங்கிரசுக்காரர்கள், பெரிய தடிகளில் கொடிகளைக் கட்டிக் கொண்டு சென்றதுடன், பயங்கர ஆயுதங்களையும், கற்களையும், சோடா புட்டிகளையும் கையில் எடுத்துச் சென்றிருக்கின்றனர்.

ஊர்வலம் அண்ணா சிலையருகில் வந்தபோது, கருப்புத் துணியை வீசுவதாகக் கூறி, சிலைமீது செருப்புகளையும் கற்களையும் வீசியிருக்கின்றனர். காவல் துறையினர் பலத்தபாதுகாப்பு ஏற்பாடு செய்திருந்ததால் அவர்கள், சிலையருகே நெருங்கவோ, திட்டமிட்டிருந்தபடி விஷமச்செயலில் ஈடுபடவோ இடமில்லாமற் போய்விட்டது.

ஊர்வலம் தொடர்ந்து தனது பாதையில் செல்லுவதற்குப் பதில் வேறு பாதையில் திரும்பி, 'தினத்தந்தி' அலுவலகத்தைத் தாக்க முயன்றதன் மூலம், அவர்கள் திட்டமிட்டே கலவரத்தில் ஈடுபட்டிருக்கின்றனர் என்பது புலப்பட்டுவிட்டது.

அனுமதிக்கப்பட்ட வழியைவிட்டு வேறு வழியில் திரும்பியவர்களைப் போலீசார் தடுத்தும் அவர்கள் மீறி, 'தினத்தந்தி' அலுவலகத்தை நோக்கி முன்னேற முயன்றனர்; தடுத்த போலீசாரையும் தாக்கினர், கற்களை வீசினர். கையில் கொண்டுவந்த சோடாபுட்டிகளையும் வீசினர்; நிலைமை கட்டுக்கடங்காத நிலையில், போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர்.

ஒரு போலீசு மோட்டார் வண்டிக்கும், ஒரு போலீசு அதிகாரியின் மோட்டார் சைக்கிளுக்கும் தீ வைத்தனர்.

போலீசாரை மட்டுமன்றி அந்த வழியே வந்த பொதுமக்களையும் தாக்கிப் படுகாயப்படுத்தியிருக்கின்றனர்.

ரிப்பன் கட்டிடம் அருகில் ஊர்வலம் வந்தபோது சில காங்கிரசார் பக்கத்தில் உள்ள இரயில் பாதையில — மதில் மறைப்பில் நின்றுகொண்டு கற்களைப் போலீசார்மீது வீசினர். சில கடைகளிலும் புகுந்து சோடா புட்டிகளை எடுத்து வீசினர்.

பொய்யையும் புனைசுருட்டையுமே தாங்கள் மூலதனமாகக் கொண்டு அரசியல் பிழைப்பு நடத்திவரும் காங்கிரசுக்காரர்கட்கு, தமிழக அரசியலில் வேலையே இல்லாமற் போய்விட்டதால் அவர்கள், தங்கள் ஆத்திரத்தை ஆளுங்கட்சியான தி. மு. க. மீதும், தி. மு. க. ஆதரவாளர்கள் மீதும் காட்டிக்கொள்ள அடிக்கடி இப்படிப்பட்ட 'ஊர்வலம்—ஆர்ப்பாட்டம்' என்ற பெயரால் அராஜகத்தில் ஈடுபட்டுத் 'தியாகி'கள் ஆகத் துடிக்கின்றனர் என்பதைப் பொதுமக்கள் நன்றாக உணர்ந்து கொண்டுவிட்டனர்! நேற்று நடந்த கேலிக் கூத்தையும், காலித்தனத்தையும் கண்டு பொதுமக்கள் எள்ளி நகையாடுகின்றனர்!

போலீசு ஆணையர் அறிக்கை

நேற்றைய சம்பவம் குறித்துக் காவல்துறை ஆணையாளர் விடுத்துள்ள அறிக்கையில தெரிவித்திருப்பதாவது:—

ஒரே ஒருதடவைதான் தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது; ஊர்வலம் ஒரு பத்திரிகை அலுவலகக் காம்பவுண்டுக்குள் நுழைய முயன்றபோது பூந்தமல்லி நெடுஞ்சாலையில இந்தத் தடியடிப் பிரயோகம் நடந்தது.

ஊர்வலத்தைச் சேர்ந்த 1000 பேருக்குமேல் இந்த அலுவலகத்தில் வலுக்கட்டாயமாக நுழைய முயன்றார்கள்; ஆனால் தடுக்கப்பட்டனர்.

ஊர்வலத்திலிருந்த சிலர் பக்கத்திலுள்ள ஒரு சர்ச்சுக்குள் ஏறிக் குதித்து, வேறொரு கதவு வழியே இந்த அலுவலகத்துக்குள் நுழைய முயன்றனர்; இவர்களும் தடுக்கப்பட்டனர்.

ஆத்திரமடைந்த கூட்டம் கல் வீசத் தொடங்கியது. போலீசு அதிகாரிகளையும் தாக்கத் தொடங்கியது.

இரண்டு போலீசு உதவிக் கமிஷனர்களுக்குக் கல்லடி பட்டும், கழிகள் பட்டும் தலையில் இரத்தக் காயம் ஏற்பட்டது.

அடிபட்டும்கூட இந்த அதிகாரிகள், கலைந்து செல்லுமாறு கூட்டத்தினரைக் கேட்டுக்கொண்டனர். பலன் கிடைக்காமல் போகவே, தடியடிக்கு உத்தர விடப்பட்டது.

2-உதவிக் கமிஷனர்கள், ஒரு ரிசர்வ் இன்ஸ்பெக்டர், ஒரு சப்-இன்ஸ்பெக்டர், 2 எட்-கான்ஸ்டபிள்கள், 49-கான்ஸ்டபிள்கள் உட்பட மொத்தம் 142-பேர் காயமடைந்தனர்.

இரண்டு உதவீக் கமிஷனர்களுக்குத் தலையில் தையல் போட்டு வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்; மற்றவர்கள் இராயப்பேட்டை மருத்துவமனை, ஜெனரல் மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

இது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட 4-பேர் பின்னர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கலவரம் நடந்த இடத்துக்கு அருகில் ஊர்வலத்தினர் கொண்டு வந்திருந்த 200 சைக்கிள்களுக்கு மேல் கைவிடப்பட்டிருந்தன; அவை கைப்பற்றப்பட்டு நகர போலீசு அலுவலகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இந்தச் சம்பவங்களுக்குப் பிறகு நிலைமை கட்டுக்கடங்கியுள்ளது. பல பகுதிகளில் போலீசுரோந்து தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது.

சைதை வட்டக் கழகத் தேர்தல்

3-8-68 சனி மாலை 3 மணிக்கு

வில்லிவாக்கம்

எல்லப்ப செட்டியார் சத்திரத்தில் நடைபெறும்

வழக்கறிஞர்

வேலூர் நாராயணன்

ஆணையாளராகப் பொறுப்பேற்று நடத்துவார்.

நிலைமையைப் போலீசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.

வெளியூர்களில் சில இடங்களைத் தவிர, வேறு எங்குமே கூட்டங்களுக்குத் தடை விதிக்கப்படவில்லை; ஊர்வல மார்க்கம் மட்டுமே ஒழுங்குபடுத்தப்பட்டது.

சீனாவிடமிருந்து திரும்பி இந்திய எல்லையைக் கடக்கக் கலக நாகர்கள் செய்த முயற்சியின்போது ஏற்பட்ட கைகலப்பில், நாகர்களுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

குறைந்தது 70 நாகர்களாவது இறந்துவிட்டிருக்கக் கூடும் என நம்பப்படுகிறது.

மூடிய ஆலைகளைத் திறக்க டெல்லி செய்யப் போவதென்ன?

வரி விலக்கு அளிக்க இயலாதென மத்திய அமைச்சர் கைவிரிப்பு

மத்திய அரசின் போக்கு பற்றி நாடாளுமன்றத்தில் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஆக. 1—

"நிதி நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் ஆலைகளுக்கு வரி விலக்கு அளிப்பதன் மூலமாக எந்த நிவாரணமும் அளிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்காது"

என்று வர்த்தக அமைச்சர் தினேஷ் சிங், நாடாளுமன்ற மேலவையில் கூறியுள்ளார்.

நாட்டில் ஏராளமான அளவில் நூற்பாலைகள் மூடப்பட்டு வரும் நிலைமைபற்றி நடைபெற்ற நான்கு மணி நேர விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

மேலும் அவர் வெளியிட்ட கருத்துக்களாவன:—

"நூற்பாலை கார்ப்பரேஷன் அமைத்து முதலீட்டுக்கு ஓரளவு உதவி செய்து மேற்படி ஆலைகளை இயங்கச் செய்யச் சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுடன் கலந்து பேசிவருகிறோம்.

ஆலைச் சொந்தக்காரர்கள் தங்கள் ஆலைகளை நவீனப்படுத்தி இலாபகரமாக நடத்த முயற்சி எடுப்பார்களானால், அவர்களுக்கு உதவி செய்ய அரசு இன்னமும் ஆயத்தமாயுள்ளது.

இது மிகப் பெரிய ஒரு தொழிலாகும்; ஆனால் இவ்வாலைகளை நவீனப்படுத்த இயலாமல், விரிவுபடுத்துவதிலேயே ஆலை அதிபர்கள் குறியாக இருந்துவந்தனர். இதனால் இத்தொழிலில் சுமை கூடிக்கொண்டே வந்தது.

சிறிது காலத்துக்குத் தங்களது இலாபத்தை மறந்து ஆலை அதிபர்கள், ஆலைகளை நவீனப்படுத்த முன்வரவேண்டும்; அப்பொழுதுதான் தொழிலாளர்களும் தொல்லைகளை ஏற்று ஒத்துழைக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்ப்பதில் நியாயமிருக்க முடியும்.

அமைக்கப்பட்டுள்ள நூற்பாலைக் கார்ப்பரேஷன் கழிவுப் பொருட்களையெல்லாம் ஏற்றுக்கொள்ளும் ஒரு நிறுவனமல்ல; 'இலாபகரமாக இயங்க முடியும் என்ற நிலையிலுள்ள ஆலைகளை மட்டுமே அது ஏற்கும்."

விவாதத்தில் கலந்துகொண்ட சுதந்தரா உறுப்பினர் கே. சுந்தரம் கூறியதாவது:—

"1964—65-ம் ஆண்டு அளவுக்கு வரி அளவைக் குறைக்க வேண்டும்.

அரைகுறை மனத்துடன் எடுக்கப்படும் முயற்சிகள் பயன்தரா! சென்றமாதம்வரை 78 ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. சில பகுதிகளில் ஆலைகளை மூடும் நிலைமை சட்டம்—அமைதியைக் கூடப் பாதித்திருக்கிறது.

இந்த நெருக்கடிக்குக் காரணம், உலகப் பஞ்சு இறக்குமதிக்கு மத்திய அரசு அனுமதி தராமல் காலம் கடத்தியதே ஆகும்.

பஞ்சுப் பற்றுக்குறை மிகக் கடுமையாக இருந்தபோது பி எல். 480 திட்டப்படி பஞ்சு இறக்குமதி செய்ய அனுமதி தருவதில் கூட அரசு வீண் காலதாமதம் செய்தது."

மேலும் அவர் பேசுகையில், ஆலைகளை நவீனப்படுத்த ஆலை அதிபர்கள் முயற்சிக்கவில்லை என்பதனையும் மறுத்தார்; 'கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலுமாக ரூ. 304 கோடி இத்தொழிலில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது' என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

நம்நாடு

[illegible]: இரா. செழியன் [illegible]

திருவள்ளுவராண்டு 1999 ஆடி 18 (2—8—68) வெள்ளி

வீழ்ச்சியைக் காட்டும் அறிகுறி!

'தொழில் அமைப்புக்கள், அரசியல் கட்சிகளுக்கு நிதி உதவி செய்வதற்குத் தடை விதிக்க வேண்டும்' என்ற கோரிக்கை பல ஆண்டுக்காலமாக இருந்துவருகிறது. 'அதற்காக ஒரு சட்டத்தையும் உருவாக்கவேண்டும்' என்றும் அக்கோரிக்கையாளர்கள் வற்புறுத்திவந்தனர் -- வருகின்றனர்.

தொழில் அமைப்புக்களிலிருந்து நிதி உதவியைப் பெற்று வருவதில், காங்கிரசுக் கட்சிக்கே முதலிடம் இருந்துவந்திருக்கிறது. கடந்த மூன்று பொதுத் தேர்தல்களிலும், காங்கிரசுக் கட்சிக்கே தொழில் அமைப்புக்கள் வாரி வழங்கிவந்திருக்கின்றன.

பெருந்தொகையைத் 'தேர்தல் நிதி'யாகத் தானே பெற்று வருவதன் விளைவாக, 'நிதி உதவி செய்வதைச் சட்டப்படி தடை செய்ய வேண்டும்' என்ற நியாயமான கோரிக்கையை, காங்கிரசுக் கட்சி ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. 'தடை விதித்துச் சட்டமியற்ற முடியாது' எனத் திட்டவட்டமாகக் காங்கிரசுக் கட்சி கூறியும் வந்திருக்கிறது.

காங்கிரசுக் கட்சிக்கு மட்டுமே பெருந் தொகையை நிதி உதவியாக வழங்கிவந்த தொழில் அமைப்புக்கள், அப்போக்கை மாற்றிக் கொள்ளத் தீர்மானித்து, தங்களுக்குப் பிடித்தமான மற்ற அரசியல் கட்சிகளுக்கும் கணிசமாக நிதியுதவி செய்யத் துணிந்தது. காங்கிரசுக் கட்சிக்கு ஈடாக மற்ற அரசியல் கட்சிகளையும் மதித்து, காங்கிரசுக் கட்சிக்கு வழங்கிவந்திருப்பதைப் போன்றே கணிசமான தொகையை மற்ற அரசியல் கட்சிகளுக்கும் வழங்க முனைந்துள்ளதை, காங்கிரசுக் கட்சியினால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. காங்கிரசுக் கடசி உட்பட மற்ற அரசியல் கட்சிகளுக்கும் கணிசமாக நிதி உதவி செய்யும் அளவுக்குத் தொழில் அமைப்புக்களிடை ஏற்பட்டிருக்கின்ற மனப்போக்கைக் கண்டு காங்கிரசுக் கட்சிக்கு மிரட்சி ஏற்பட்டுவிட்டிருக்கிறது. இதன் பலனாக, 'அரசியல் கட்சிகளுக்குத் தொழில் அமைப்புக்கள் நிதி உதவி வழங்கிவருவதைச் சட்டத்தின்மூலம தடுத்து நிறுத்தமுடியாது' எனத் துவக்க முதலே பிடிவாதமாகப் பேசிவந்த காங்கிரசுக் கட்சி, அப்பிடிவாதத்தைக் கைவிட்டுவிட்டு இப்பொழுது சட்டமியற்றத் துணிந்து முன்வந்திருப்பதற்கு, மேற்குறிப்பிட்டிருக்கின்ற காரணத்தை --- எதிர்க் கட்சியைச் சேர்ந்த சிலர் -- கூறுகின்றனர். இந்தக் கருத்தை முழு உண்மை என ஒப்புக்கொள்ளுவதற்கில்லை என்றாலும், 'பொருத்தமற்றது' எனத் தள்ளிவிடுவதற்குமில்லை.

இதே நேரத்தில், தொழில் அமைப்புக்கள் அரசியல் கட்சிகளுக்கு நிதியுதவி செய்துவருவதைத் தடுத்து நிறுத்தும் கருத்துடன், பி. சோ. கட்சியைச் சேர்ந்த நாத்பாய் அவர்கள், தனி நபர் மசோதா ஒன்றை மக்களவையில் கொண்டு வந்தார். அம்மசோதாவின் தேவையைக் கொள்கையளவில் ஆளும் காங்கிரசுக் கட்சி ஏற்றுக்கொண்டு 'அதற்குரிய மசோதா ஒன்று அரசு சார்பில் கொண்டுவரப்படும்' என வாக்களித்து, தனி நபர் மசோதாவைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி இந்திய அரசு சார்பில் கோரப்பட்டது. அக்கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, தாம் கொண்டுவந்திருந்த தனி நபர் மசோதாவைத் திரும்பப் பெற்றுக்கொண்டுவிட்டார்--நாத்பாய்.

அரசு சார்பில் அப்பொழுது தரப்பட்ட வாக்குறுதிப்படி, இப்பொழுது நடைபெறுகின்ற மக்களவைக் கூட்டத்தில், அரசியல் கட்சிகளுக்குத் தொழில் அமைப்புக்கள் நிதியுதவி அளிப்பதைத் தடுத்து நிறுத்தும் மசோதா ஒன்றை இந்திய அரசு கொண்டு வந்திருக்கிறது. இதைக் கண்டதும், காங்கிரசு நாடாளுமன்றக் கட்சியிலுள்ள சில காங்கிரசு முக்கியஸ்தர்கள் விழித்துக்கொண்டு விட்டனர். குறிப்பிட்ட மசோதா சட்டமாக்கப்படடுவிட்டால், காங்கிரசுக் கட்சி நிதிப் பற்றுக்குறையில் மூழ்கி, அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாத அளவுக்குத் தேர்தலில் முழுத் தோல்வியை அடைந்துவிடக்கூடிய அபாயம் ஏற்பட்டுவிடும் என அழ ஆரம்பித்துள்ளனர்.

இம்மசோதாவைச் சட்டமாக்குவதில், அமைச்சரவைக்குள்ளாகவேகூட ஒன்றுபட்ட கருத்தில்லை துணைத் தலைமை அமைச்சராகவும் நிதி அமைச்சராகவும் உள்ளவரே, இம்மசோதா இப்பொழுது உருவாக்கப்பட்டிருக்கின்ற நிலையில் சட்டமாக ஆக்கப்படுவதை விரும்பவில்லை.

காங்கிரசுக் கட்சியினருககுள்ளாகக் கிளம்பியுள்ள இக்கொந்தளிப்பின் விளைவாக, அரசுச் சார்பில் மக்கள்சபையில் விவாதிக்கப் படவிருக்கின்ற தடை மசோதா, இப்பொழுது உருவாக்கப்பட்டிருக்கின்ற நிலையிலேயே சட்டமாக்கப்படுமா என்பது சந்தேகமே! ஏதோ தனிச் சட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது எனப் பீத்திக் கொள்ளுவதற்கான வகையில், உப்புச்சப்பற்ற சட்டமொன்று நிறைவேற்றப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

'தொழில் அதிபர்களிடம் பெருந் தொகையைத் தேர்தல் நிதியாகப் பெருமல், தேர்தல் வெற்றியைப் பெறமுடியாது' என்ற முடிவுக்குக் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த குறிப்பிடத்தக்க தலைவர்கள் வந்திருப்பதில் அரிய உண்மை ஒன்று மறைந்திருக்கிறது. அதாவது, சென்ற காலத்தில் நடைபெற்றுள்ள தேர்தல்கள் அனைத்திலும் கொள்கையைக் கூறிப் பெற்ற வெற்றியைக் காட்டிலும், பணத்தைக் கொட்டி விலை கொடுத்து வாங்கிய வெற்றிதான் அதிகம் என்ற உண்மை, 'தொழில் அதிபர்களின் நிதி இல்லாமல் காங்கிரசுக் கட்சி தேர்தலில் ஈடுபட முடியாது' என்ற முடிவினை காங்கிர்சுத் தலைவர்கள் வெளியிட்டிருப்பதிலிருந்து விளக்கமாகிறது.

தாங்கள் பேசும் 'சோஷலிசம்' பற்றிய கருத்தை மக்கள் நம்பமாட்டார்கள்--இதுவரையில் நம்பவுமில்லை என்பதை, காங்கிரசுத் தலைவர்கள் மறைமுகமாக ஒப்புக்கொண்டுவிட்டனர். 'ஐந்தாண்டுத் திட்டங்களைக் காட்டி, மக்களின் ஆதரவைக் காங்கிரசுக் கட்சியால் பெறமுடியாது' என்ற முடிவுக்குத் தாங்கள் வந்துவிட்ட

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கழகத் தேர்தல்

வட்டக் கழகம்---பெருநகரக் கழகம்

ஆகிய அமைப்புக்களின் தேர்தல்

3--8--68 சனி பிற்பகல் 3-மணி

கீழ்க்கண்டுள்ள விவரப்படி 3—8—68 சனி பிற்பகல் 3-மணிக்கு வட்டக்கழகம்—பெருநகரக் கழகம் ஆகியவைகள் தேர்தல்கள் நடைபெறும். தேர்தல் ஆணையாளர்கள், தேர்தல் நடைபெறும் இடத்திற்கு 2 மணி நேரத்திற்கு முன்னதாகவே வருகைதந்து, போட்டியிடும் வேட்பாளர்களின் விவரங்களை அறிவிப்பார்.

குறிப்பு : 'பெருநகரம்' என்று குறிப்பிடப்பட்டவை தவிர மற்றவை 'வட்டங்கள்' ஆகும்.

மாவட்டம்	வட்டம்—பெருநகரம்	தேர்தல் நடைபெறும் இடம்	ஆணையாளர்
செங்கற்பட்டு	காஞ்சி (பெருநகரம்)	சண்முகம் நினைவு மன்றம்	வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ.
	சைதை வட்டம்	வில்லிவாக்கம் பள்ளி	வேலூர் நாராயணன் எம்.ஏ.பி.எல். எம்.சி.
	உத்திரமேரூர்	பயணிகள் விடுதி உத்திரமேரூர்	சு. பாலன் எம்.சி.
வட ஆற்காடு	வேலூர்	பயணிகள் விடுதி, ஆம்பூர்	லோகநாதன் எம் சி.
	போளூர்	பயணிகள் விடுதி, போளூர்	கோ. இளவரசு எம்.சி.
	செங்கம்	பயணிகள் விடுதி, செங்கம்	இரா. சடகோபன் எம்.சி.
	வாலாசா	பயணிகள் விடுதி, இராணிப் பேட்டை	கே. எஸ். தினகரன்
	திருப்பத்தூர்	பயணிகள் விடுதி, திருப்பத்தூர்	எம். கமலநாதன் எம்.பி.
தெ. ஆற்காடு	செஞ்சி	பயணிகள் விடுதி, செஞ்சி	சைதை சம்பந்தம் எம்.சி.
	விழுப்புரம்	,, ,, விழுபபுரம்	ஆர். டி பாஸ்கரன் எம்.சி.
	விருத்தாசலம்	,, ,, விருத்தாசலம்	கோவை செழியன் பி.ஏ.
	திருகோயிலூர்	,, ,, திருக்கோவிலூர்	ம. சு. இராமதாஸ்
புதுவை	புதுவை பெருநகரம்	திருமண மண்டபம், 33, அம்பலத் தாடு ஐயர் மடத் தெரு, புதுவை	க. பார்த்தசாரதி எம்.சி.
தஞ்சை	தஞ்சை	கழகக் கட்டிடம், திருவையாறு	அன்பில் தர்மலிங்கம்
	குடந்தை	பயணிகள் விடுதி, குடந்தை	அ. பொ. அரசு எம்.எல்.ஏ.
	நன்னிலம்	விவேகானந்தா வாசகசாலை, நன்னிலம்	ந. கணபதி பி எஸ்சி., பி.எல்.
	அறந்தாங்கி	பயணிகள் விடுதி, அறந்தாங்கி	ஏ. எஸ். இராமன் எம்.சி.
	மாயூரம்	,, ,, மாயூரம்	எஸ். எம். கிருஷ்ணன் எம்.சி.
	திருத்துறைப் பூண்டி	ஏ. எல். ஏ. அகமது கட்டிடம், திருத்துறைப்பூண்டி	சா. கணேசன் எம்.சி.
	ஒரத்தநாடு	குமரி பிரஸ், ஒரத்தநாடு	ஜி. நீலமேகம் பி.எஸ்சி , பி.எல்.
திருச்சி	திருச்சி	தமிழ்ச் சங்கக் கட்டிடம் (மேலப் புலிவார் ரோடு)	காஞ்சி கல்யாணசுந்தரம்
	லால்குடி	சாந்தி தியேட்டர், பூவாளூர்	டி. என். கிருஷ்ணன் எம்.சி.
	செயங்கொண்டம்	பயணிகள் விடுதி, செயங்கொண் டம்	பெரம்பூர் மாசிலாமணி
	முசிறி	,, முசிறி	கே. எம். கண்ணபிரான்
	மணப்பாறை	,, மணப்பாறை	புருடோத்தமன் எம்.சி.
	திருமயம்	,, திருமயம்	எம். கன்னியப்பன் எம்.சி.
தருமபுரி	தருமபுரி	,, அதமன்கோட்டை	ந. செயராமன்
	ஒசூர்	,, ஒசூர்	ஆ. மு. நாராயணன்
சேலம்	சேலம்	விசயராகவாச்சாரியார் திடல், சேலம்	வை. இரத்தினவேலு பி.ஏ.
	ஆத்தூர்	ஆறுமுகனார் மன்றம், ஆத்தூர்	ப. க. வேணுகோபால்
	நாமக்கல்	பி. எஸ். ஆர். திடல், நாமக்கல்	ஓ. எஸ். பாலசுந்தரம்
	சங்ககிரி	பயணிகள் விடுதி, சங்ககிரி	கே. காமாட்சி
	சேலம் நகரம்	விசயராகவாச்சாரியார் திடல், சேலம்	கந்தசாமி பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ.
கோவை	கோபி	நெடுஞ்சாலைத் துறை பயணிகள் விடுதி, கோபி	கோ. செங்குட்டுவன்
	அவினாசி	பயணிகள் விடுதி, அவினாசி	நீலநாராயணன்
	தாராபுரம்	,, தாராபுரம்	முத்துராமலிங்கம்
	உடுமலை	,, உடுமலை	டி. கே. கபாலி எம்.சி.
	பவானி	ஆனந்தா ரைஸ் மில், பவானி	எ. செல்வராஜ் எம்.சி.
	பல்லடம்	பயணிகள் விடுதி, பல்லடம்	மு. வரதராசன்
மதுரை	மதுரை வடக்கு	சமயநல்லூர்	அ. கரிகாலன் எம். சி.
	மதுரை தெற்கு	திருப்பரங்குன்றம் திருமண மண்டபம்	டி. கே. பொன்னுவேலு பி.ஏ., எம்.எல்.சி.
	திருமங்கலம்	பயணிகள் விடுதி, திருமங்கலம்	கோமகன்
	திண்டுக்கல்	,, செம்பட்டி	க. அன்பிற்கரசன் எம்.சி.
	நிலக்கோட்டை	,, கோடை ரோடு	இலட்சுமிபதி எம்.சி.
	கொடைக்கானல்	,, கொடைக்கானல்	புலவர் நடேசன்
	வேடசந்தூர்	பயணியர் விடுதி, வேடச்சந்தூர்	மோகனரங்கம் எம்.சி.
	உசிலம்பட்டி	,, ,, உசிலம்பட்டி	வேணுகோபால் எம்.சி.
முகவை	இராமநாதபுரம்	,, ,, இராமநாதபுரம்	எஸ். வி. வேலு
	சிவகெங்கை	,, ,, சிவகெங்கை	தமிழ்மணி எம்.சி.
	சாத்தூர்	,, ,, சாத்தூர்	சுப்பிரமணியம் எம்.சி.
	முதுகுளத்தூர்	,, ,, முதுகுளத்தூர்	தி. சு. நல்லதம்பி எம்.சி.
நெல்லை	நெல்லை	குறுக்குத்துறை திருமணமண்டபம்	இரா. சம்பந்தம் எம்.சி.
	திருவைகுண்டம்	பயணியர் விடுதி, திருவைகுண்டம்	அப்துல் காதர் பி.எஸ்சி.
	சங்கரன்கோவில்	,, ,, சங்கரன்கோயில்	காஞ்சி மணிமொழியார்
	திருச்செந்தூர்	,, ,, திருச்செந்தூர்	குமார்
	தென்காசி	திவான் பங்களா, குற்றாலம்	மா. தங்கவேலர்
	செங்கோட்டை	பயணியர் விடுதி, செங்கோட்டை	நாகராசன் எம்.சி.
குமரி	நாகர்கோயில் வட்டம்	தெங்கம்புதூர் தியேட்டர், அகத்தீஸ்வரம்	கே. கோவிந்தசாமி எம்.சி.
	கல்குளம்	சேது டாக்கீஸ், தக்கலை	பி. கே. துரைக்கண்ணு
நீலகிரி	குன்னூர்	பயணியர் விடுதி, குன்னூர்	டி கே. சிவகுமாரன்

[4--8--68-ம் நாள் நடைபெறும் தேர்தல்கள் பற்றிய விவரம் 3-ம் பக்கத்தில் பார்க்கவும்]

4--8--68 ஞாயிறு நடைபெறும் தேர்தல்கள்

காலை 10-மணி

[தேர்தல் ஆணையாளர்கள், தேர்தல் நடைபெறும் இடத்திற்கு இரண்டு மணி நேரம் முன்னதாகவே வருகை தந்து போட்டியிடும் வேட்பாளர்களின் விவரங்களை அறிவிப்பார்]

மாவட்டம்	வட்டம்—பெருநகரம்	தேர்தல் நடைபெறும் இடம்	ஆணையாளர்
செங்கற்பட்டு	காஞ்சி	சண்முகம் நினைவு மன்றம், காஞ்சி	வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ.
	பொன்னேரி	பயணியர் விடுதி, பொன்னேரி	பொ. கு. ராமதாஸ் எம்.சி.
	திருவள்ளூர்	,, ,, திருப்பாச்சூர்	என். ஏ. பழனி எம்.சி.
	திருத்தணி	,, ,, திருத்தணி	எஸ். கன்னியப்பன் எம்.சி.
	திருப்பெரும்புதூர்	,, ,, பூவிருந்தவல்லி	ஜேசுதாஸ் எம்.சி.
	செங்கற்பட்டு	,, ,, செங்கல்பட்டு	வேலூர்நாராயணன் எம்.ஏ.பி.எல்.
	மதுராந்தகம்	சழகக் கட்டடம், மதுராந்தகம்	சு. பாலன் எம்.சி.
வட ஆற்காடு	வேலூர் (பெருநகரம்)	டவுன் ஹால், வேலூர்	லோகநாதன் எம்.சி.
	ஆரணி	பயணியர் விடுதி, ஆரணி	கோ. இளவரசு எம்.சி.
	அரக்கோணம்	,, ,, அரக்கோணம்	சிட்டிபாபு எம்.பி.
	திருவண்ணாமலை	,, ,, திருவண்ணாமலை	இர. சடகோபன் எம்.சி.
	குடியேற்றம்	நகரக் கழக அலுவலகம், குடியேற்றம்	டபிள்யூ.பி.பி. சுந்தரம்
	செய்யாறு	பயணியர் விடுதி, செய்யாறு	அ. கபாலமூர்த்தி எம்.சி.
	வந்தவாசி	,, ,, வந்தவாசி	மு. ச. இளங்கோ எம்.சி.
தெ. ஆற்காடு	திண்டிவனம்	பயணியர் விடுதி, திண்டிவனம்	சைதை சம்பந்தம் எம்.சி.
	சிதம்பரம்	,, சிதம்பரம்	ஆர். டி. பாஸ்கரன் எம்.சி.
	கடலூர்	வர்த்தகர் சங்கம், கடலூர் (என்.டி.)	கோவை செழியன் பி.ஏ.
	கள்ளக்குறிச்சி	பயணியர் விடுதி, கள்ளக்குறிச்சி	ந. சு. மணி
புதுவை	புதுவை	அனந்தம்மாள் சத்திரம், வில்லியனூர், புதுவை	க. பார்த்தசாரதி எம்.சி.
தஞ்சை	தஞ்சை பெருநகரம்	இராமநாதன்செட்டியார் மண்டபம்	அன்பில் தருமலிங்கம்
	குடந்தை பெருநகரம்	கழகக் கட்டிடம், குடந்தை	அ. பொ. அரசு எம்.எல்.ஏ.
	பாபநாசம்	பயணியர் விடுதி, பாபநாசம்	ந. கணபதி பி.எஸ்சி.,பி.எல்.
	பட்டுக்கோட்டை	,, பட்டுக்கோட்டை	ஏ. எஸ். இராமன் எம்.சி.
	சீர்காழி	,, சீர்காழி	எஸ். எம். கிருஷ்ணன் எம்.சி.
	நாகை	பாண்டியன் தியேட்டர்	சா. கணேசன் எம்.சி.
	மன்னார்குடி	ப. நா. இல்லம், மன்னை	ஜி. நீலமேகம் பி.எஸ்சி.,பி.எல்.
திருச்சி	அரியலூர்	பயணியர் விடுதி, அரியலூர்	டி. என். கிருஷ்ணன் எம்.சி.
	பெரம்பலூர்	இலட்சுமி தியேட்டர், பெரம்பலூர்	மு. மாசிலாமணி
	குளித்தலை	பயணியர் விடுதி, குளித்தலை	கே. எம். கண்ணபிரான்
	கரூர்	,, கரூர்	புருடோத்தமன் எம்.சி.
	திருச்சி பெருநகரம்	தமிழ்ச் சங்கக் கட்டிடம், திருச்சி	காஞ்சி கல்யாணசுந்தரம்
	குளத்தூர்	பயணியர் விடுதி, குளத்தூர்	எம். கன்னியப்பன் எம்.சி.
	ஆலங்குடி	தி.மு.க. அலுவலகம், ஆலங்குடி	எம். கன்னியப்பன் எம்.சி.
தருமபுரி	கிருஷ்ணகிரி	சே. ஆர். பி பயணியர் விடுதி	ந. செயராமன்
	அரூர்	சித்ரா டாக்கீஸ்	ஆ. மு. நாராயணன்
சேலம்	திருச்செங்கோடு	வட்டக் கழக அலுவலகம், திருச்செங்கோடு	ப. க. வேணுகோபால்
	மேட்டூர்	பாப்பம்மாள் திருமண மண்டபம், மேட்டூர்	ஓ. எஸ். பாலசுந்தரம்
	ஓமலூர்	பயணியர் விடுதி, ஓமலூர்	கந்தசாமி எம்.எல்.ஏ.
	இராசிபுரம்	ஏசுநாதர் ஆலய மண்டபம், இராசிபுரம்	கே. காமாட்சி
கோவை	கோவை நகரம்	கழகக் கட்டிடம், கோவை	கோ. செங்குட்டுவன்
	கோவை	நகராட்சிப் பயணியர் விடுதி, கோவை	நீல. நாராயணன்
	சிங்காநல்லூர் பெருநகரம்	வாவியர் திருமண மண்டபம், சிங்காநல்லூர்	முத்துராமலிங்கம்
	திருப்பூர் பெருநகரம்	பயணியர் விடுதி, திருப்பூர்	டி. கே. கபாலி எம்.சி.
	ஈரோடு பெருநகரம்	நகராட்சிப் பயணியர் விடுதி, ஈரோடு	வை. ரத்தினவேலு பி.ஏ.
	ஈரோடு	பயணிகள் விடுதி, பெருந்துறை	ஏ. செல்வராசு எம்.சி.
	பொள்ளாச்சி	வெங்கடேசுவரா காலனி, எம்.எல்.ஏ. விடுதி, பொள்ளாச்சி	மு. வரதராசன்
மதுரை	மதுரை பெருநகரம்	திருமண மண்டபம், ஆழ்வார்புரம், மதுரை	அ. கரிகாலன் எம். சி.
	மேலூர்	பயணியர் விடுதி, மேலூர்	து. வேணுகோபால் எம்.சி.
	திண்டுக்கல் பெருநகரம்	,, திண்டுக்கல்	அன்புக்கரசன் எம்.சி.
	பழனி	,, பழனி	லட்சுமிபதி எம்.சி.
	பெரியகுளம்	,, பெரியகுளம்	புலவர் நடேசன்
	உத்தமபாளையம்	,, உத்தமபாளையம்	மோகனரங்கம் எம்.சி.
முகவை	பரமக்குடி	பயணியர் விடுதி, பரமக்குடி	எஸ். வி. வேலு
	திருப்பத்தூர்	,, திருப்பத்தூர்	தமிழ்மணி எம்.சி.
	திருவில்லிபுத்தூர்	,, திருவில்லிபுத்தூர்	சுப்பிரமணி எம்.சி.
	திருவாடானை	,, திருவாடானை	தி. சு. நல்லதம்பி எம்.சி.
	அருப்புக்கோட்டை	,, அருப்புக்கோட்டை	கோமகன்
நெல்லை	நெல்லை பெருநகரம்	குறுக்குத்துறை திருமணமண்டபம்	இரா. சம்பந்தம் எம்.சி.
	தூத்துக்குடி பெருநகரம்	வடக்கூர் தி. மு க. உடற்பயிற்சிக் கழகம்	அப்துல் காதர் பி.எஸ்சி.
	கோவில்பட்டி	டூரிங் சினிமா, விளாத்திகுளம்	காஞ்சி மணிமொழியார்
	நாங்குநேரி	பயணியர் விடுதி, வள்ளியூர்	குமார்
	அம்பாசமுத்திரம்	,, அம்பாசமுத்திரம்	மா. தங்கவேலர்
குமரி	நாகர்கோவில் பெருநகரம்	,, வடசேரி	கே. கோவிந்தசாமி எம்.சி.
	விளவங்கோடு	,, குளித்துறை	பி. கே. துரைக்கண்ணன்
	தோவாளை	,, பூதபாண்டி	டி. கே. பொன்னுவேலு பி.ஏ., எம்.எல்.சி.
நீலகிரி	கூடலூர்	பயணியர் விடுதி, கூடலூர்	டி.கே. சிவகுமாரன்
	உதகை	,, உதகை	,,

குறிப்பு : (1) நீலகிரி மாவட்டத்தில் 4—8—68 அன்று கூடலூரில் காலை 10 மணிக்கும் உதகையில் பிற்பகல் 3 மணிக்கும் தேர்தல் நடைபெறும்.
(2) திருச்சி மாவட்டத்தில் 4—8—68 அன்று குளத்தூரில் காலை 10 மணிக்கும் ஆலங்குடியில் பிற்பகல் 3 மணிக்கும் தேர்தல் நடைபெறும்.

அமைச்சர் பதவி கேலிக்கூரியதாக ஆக்கப்படுகிறது

'முகம்மது பின் துக்ளக்'குகளாகச் சில முதலமைச்சர்கள்

கட்சி மாறிகளைக் கட்டுப்படுத்தச் சட்டம்-- நாடாளுமன்றத்தில் இரா. செழியன் இடித்துரை

புதுடில்லி, ஜூலை 28—

அமைச்சர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் தனி நபர் மசோதாமீது தி. மு. கழக உறுப்பினர் தோழர் இரா. செழியன் தந்த கருத்துரையாவது :—

மக்களின் நம்பிக்கை சிதறடிக்கப்பட்டுவிடும்

"மாநிலங்களிலும், மத்திய அரசிலும் அமைக்கப்படும் அமைச்சரவைகளில் உள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த திரு. மது லிமாயி அவர்கள் கொண்டுவந்துள்ள இந்தத் தனிநபர் மசோதாவின் அடிப்படை நோக்கத்தை நான் வரவேற்கிறேன். அதிலுள்ள நிர்ணயமுறைபற்றி பிறகு சில கருத்துகளை வைக்க எண்ணியுள்ளேன்.

அமைச்சர் பதவி வகிப்பவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இல்லையானால், சனநாயக முறையில் மக்களுக்கு உள்ள நம்பிக்கை சிதறியடிக்கப் பட்டுவிடும்.

அமைச்சர் பதவியைத் தூண்டிலாக பயன்படுத்துவதா?

ஒரு கட்சியிலிருந்து மற்றொரு கட்சிக்கு ஒரு உறுப்பினரை இழுக்க, அமைச்சர் பதவி ஒரு தூண்டிலாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தத் தவறான போக்கை ஆரம்பித்துவைத்த பெருமை காங்கிரசுக் கட்சியைத்தான் சாரும்.

எனக்கு முன்னதாகப் பேசிய காங்கிரசு உறுப்பினர் கனம் சாதவ் அவர்கள், 'கட்சிமாறிகள் அனைவருக்கும் அமைச்சர் பதவிகள் தரப்படவில்லை' என்று ஆறுதல் கூறினர் ; 'கட்சிமாறிகள் பெரும்பாலோருக்குக் கொடுத்துவிட்டோம் ; ஆனால், எல்லோருக்கும் தந்துவிடவில்லை' என்ற அளவுக்கு வேண்டுமானால் காங்கிரசுக்காரர்கள் திருப்தி அடையலாம்.

துக்ளக் வழியில் தீர்வுகாண முனையாதீர்

அமைச்சர்களின் எண்ணிக்கை சில மாநிலங்களில் வளருகின்ற வேகத்தைப் பார்த்தால், 'உறுப்பினர்கள்' என்று யாருமே அங்கு மிஞ்சமாட்டார்கள் என்று தோன்றுகிறது.

சென்னையில் 'முகமது பின் துக்ளக்' என்ற நாடகத்தை, 'சோ' என்பவர் நடத்திவருகிறார். சரித்திரப் பிரசித்தி பெற்ற முகமது பின் துக்ளக் உயிர் பெற்று—தற்காலத்திய அரசியலில் புகுந்து--தேர்தலில் வெற்றி பெறுகிறார் ; துக்ளக்கின் கட்சி 240 இடங்களைப் பிடித்து, பின் துக்ளக் தலைமை அமைச்சராக ஆகிறார். அடுத்துள்ள துணைத் தலைமையமைச்சர் பதவிக்குப் பலத்த போட்டி வருகிறது. தலைமையமைச்சர் தமக்கே உரித்தான 'துக்ளக்' வழியில் அதற்குத் தீர்வு காண்கிறார். மற்ற உறுப்பினர்களை அழைத்து, 'நான் தலைமையமைச்சர் ; உங்கள் அனைவரையும்--239 உறுப்பினர்களையும் துணைத் தலைமையமைச்சர்களாக ஆக்கிவிடுகிறேன்' என்று கூறினாராம்.

அதைப்போல், மாநில முதலமைச்சர்களாக இருக்கும் பல 'முகமது பின் துக்ளக்'குகள், தங்கள் கட்சி பலத்தைக் காப்பாற்ற முனைகிறார்கள் !

நாடகத்தில்தான் நடக்கிறது--- நாட்டிலுமா அது நடப்பது ?

பஞ்சாபில் ஜனதா கட்சி அமைச்சரவை அமைத்தது ; அதற்குக் காங்கிரசுக் கட்சி துணை இருக்கிறது.

ஜனதா கட்சியிலுள்ள உறுப்பினர்களில் ஒருவர் தவிர, மற்ற எல்லோருக்கும் அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

நாடகத்தில் மட்டுமல்ல -- நாட்டிலும் அமைச்சர் பதவியைக் கேலிக்கூத்தாக்கும் நிலைமை உருவாகியுள்ளது.

ஒரே சீரான முறையில் வரையறுக்கப்படாததேன் ?

இப்பொழுது கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவில், 'சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையில் 12-ல் 1 பங்குக்கு மேற்படாதவாறு, அமைச்சர்களின் எண்ணிக்கை இருக்கவேண்டும்' என்று வரையறுக்கப்படுகிறது ; இந்த அளவைப் பற்றி நான் ஒன்றும் கூறவில்லை.

ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒரு சீரான முறையில் வரையறுக்கப்பட

(4-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தாகவும் காங்கிரசுத் தலைவர்கள் ஒப்புக்கொள்ளுகின்றனர். அந்த நாளில் தாங்கள் செய்ததாக விளம்பரப்படுத்திக் கொள்ளும் 'தியாகங்களை'க் கூறினாலும், மக்கள், காங்கிரசுக் கட்சியை ஆதரிக்க மாட்டார்கள் என்ற முடிவுக்கும் அவர்கள் வந்துவிட்டிருக்கின்றனர்.

காங்கிரசுக் கட்சியினர் தேர்தலில் வெற்றிபெறுவதும் தோல்வியடைவதும், தேர்தலில் செலவிடக்கூடிய பணத்தின் அளவைப் பொறுத்துத்தான் இருக்கிறது என்ற முடிவுக்குக் காங்கிரசுத் தலைவர்கள் வந்திருப்பதைக் கொண்டு, இன்றையக் காங்கிரசுக் கட்சிக்கும் --- பொதுமக்களுக்கும் இருந்திடக்கூடிய இடைவெளியை, ஒருவாறு நாம் யூகித்து உணர்ந்துகொள்ளலாம். இப்பயங்கரமான பெரும் இடைவெளியை, 'பணத்தைச் செலவு செய்து, இல்லாமல் ஆக்கிவிடலாம்' அல்லது 'குறைத்துவிடலாம்' எனக் காங்கிரசுத் தலைவர்கள் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் கொண்டிருக்கின்ற இந்த நினைப்பு, அவர்கள் இன்று அடைந்திருக்கக்கூடிய வீழ்ச்சியையே படம் பிடித்துக் காட்டுகிறது.

—கா. க.

தமிழகத்தைத் தன்னிறைவு மாநிலமாக்கியது தஞ்சை!

தரை நீரையும் பயன்படுத்தி தண்ணீர் தட்டுப்பாடு அறவே தவிர்க்கப்படும்

உர உதவி மானியத்தை மீண்டும் பெறத் தமிழக அரசு போராடும்

சாகுபடி செய்பவர்களைப் பதிவு செய்யச் சட்டம் இயற்றப்படும்

தமிழக -- ஒரிசா மாநில அமைச்சர்கள் பங்கேற்ற விவசாயக் கருத்தரங்கு நிகழ்ச்சி விவரம்

தஞ்சை, ஆக. 1—

தஞ்சை மாவட்ட வேளாண்மைக் கருத்தரங்கு இன்று காலையில் தொடர்ந்து நடைபெற்றது; அமைச்சர்கள் மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி ஆகியோரும், உயர்தர அதிகாரிகளும், மாவட்டச் சட்டமன்ற உறுப்பினர்களும், ஊராட்சி ஒன்றிப்புத் தலைவர்களும், விவசாயப் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

பிற்பகல் நிகழ்ச்சியில் ஒரிசா மாநில விவசாயத்துறை அமைச்சர், ஒரிசா மாநில கூட்டுறவுத்துறைத் துணையமைச்சர், போர்டு அறக்கட்டளை நிறுவனத்தினர் ஆகியோரும கலந்துகொண்டனர்.

கருத்தரங்கில், சாகுபடிப் பிரச்சினைகள் பற்றிப் பல்வேறு தலைப்புக்களில் பத்துக் குழுக்கள் ஆராய்ந்து தெரிவித்த கருத்துக்கள் அறிவிக்கப்பட்டன.

டிராக்டர்கள், பம்பு செட்டுகள், விவசாயக் கருவிகள் ஆகியவை வாங்குவதற்கு ரூ 8,82,200-ஐ, கடன் தொகையாக அமைச்சர் ஏ. கோவிந்தசாமி வழங்கினார். பயிர் விளைச்சல் போட்டியில் கலந்துகொண்டவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

மாநாட்டைத் துவக்கிவைத்து, வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் பேசுகையில் 'சிறு பாசனத் திட்டங்களை அமுல் நடத்துவதற்கு ரூ. 20 கோடி தனி மானியமாகவோ அல்லது கடனாகவோ தருமாறு தமிழக அரசு, மத்திய அரசைக் கேட்டுக்கொண்டது; ஆனால் மத்திய அரசு அலட்சியமாக இருப்பது வருந்தத்தக்கது' என்று குறிப்பிட்டார்.

விவசாயப் பொருட் காட்சியைத் திறந்துவைத்து வருவாய் — உணவுத் துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் பேசுகையில், 'உர விலைகளைப் பழைய நிலைக்குக் கொண்டு வரவும், திரும்பப் பெறப்பட்ட உர உதவி மானியத்தை மீண்டும் அமுலாக்கவும், தமிழக அரசு மத்திய அரசுடன் போராடும்' எனக் குறிப்பிட்டார்.

கருத்தரங்கு மலரை வெளியிட்டுப் போதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் பேசுகையில், 'மழை நீரையும் ஆற்று நீரையும் நம்பியிராமல், தரை நீரையும் பயன்படுத்தும் திட்டங்களை நாம் நிறைவேற்றத் துணிந்திருக்கிறோம்; மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் விவசாயத் துறையில் உரிய கவனம் செலுத்தப்படவில்லை; பணமில்லாத நிலையில்தான் நாம் அக்கறையுடன் -- உள்ளதை வைத்துக்கொண்டு நல்லதைச் செய்யவேண்டும்' என்ற உறுதியுடன் -- செயல்பட்டதாலும், விவசாயப் பெருங்குடிமக்களின் ஒத்துழைப்பாலும இருபோக சாகுபடியை வெற்றிகரமாக்கியிருக்கிறோம்' எனக் குறிப்பிட்டார்.

"தஞ்சை விவசாயிகள் இனி மேட்டூர் தண்ணீரை நம்பியிருக்க முடியாது; மாவட்டத்தில் ஊற்று நீரைப் பயன்படுத்தவேண்டும்" என்று திரு. ஏ. கே. சுப்பையா எம்.எல்.ஏ., கூறினார்.

சிறு பாசனத் திட்டங்களை அமுல் நடத்தவேண்டியதன் அவசியத்தை வடபாதிமங்கலம் திரு. வி. எஸ். தியாகராசனார் வற்புறுத்தினார்; 'இந்தத் திட்டங்களை அமுல் நடத்துவதற்கு மேலும் நிதி ஒதுக்க வேண்டும்' என்று அவர் கூறினார்.

"நெல்லைக் காயவைப்பதற்காகச் சென்ற ஆண்டில் நிறுவப்பட்ட 30 இயந்திரச் சாதனங்களை முழுவதுமாகப் பயன்படுத்தவில்லை; இந்த ஆண்டிலாவது அவற்றை முழுவதுமாகப் பயன்படுத்தவேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

திரு. ஏ. ஆர். பாரிமுத்து எம்.எல்.ஏ., திரு. கோ. சு. மணி எம்.எல்.சி. ஆகியோரும் பேசினர்.

ஏ. கோவிந்தசாமி

குறுவை, சம்பாச் சாகுபடிக்குப் புதிய ரக விதைகளைத் தயாரிப்பதற்குத் தமிழக அரசு ரூ. 10,49,000 அனுமதித்திருக்கிறது; இந்த விதைகளைக் கொண்டு ஆடுதுறையில் உள்ள விவசாயப் பண்ணையில் சோதனை நடைபெறும்"

என்று அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள், கருத்தரங்கைத் துவக்கிவைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தஞ்சை விவசாயிகள் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சிகளைப் பாராட்டிப் பேசுகையில் அமைச்சர் கூறியதாவது :—

"முக்கியமாக தஞ்சை மாவட்ட விவசாயிகளின் முயற்சி காரணமாகத் தமிழ்நாடு உணவுத் துறையில் தன்னிறைவு பெற்றுள்ள மாநிலமாகிவிட்டது.

தஞ்சை மாவட்டத்தில் விவசாய முனையில் ஒரு புரட்சியே ஏற்பட்டிருக்கிறது.

இருபோக சாகுபடித் திட்டம் 21 இலட்சம் ஏக்கருக்கு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது இந்தத் திட்டத்தைத் துவக்கத்தில ஒரு போகம் உள்ள 6 இலட்சம் ஏக்கருக்கு விரிவுபடுத்த உத்தேசித்திருந்தனர்; இந்த ஆண்டு மேட்டூர் அணையிலிருந்து தாமதித்துத் தண்ணீர் விடப்பட்டதால் இருபோகத் திட்டத்தை 3 இலட்சம் ஏக்கருக்கு மட்டும் விரிவுபடுத்துவதென்று அரசு தீர்மானித்திருக்கிறது.

கூட்டுறவு நில அடமான பாங்கிகள் மூலம் விவசாயிகளுக்குக் கடன் உதவி அளிப்பதில் தாமதம் ஏற்படாது.

கடன் உதவி அளிப்பதற்கான விதிகளும் போதுமான அளவில் தளர்த்தப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் நடப்பு ஆண்டில் ரூ. 12 கோடி கடன் தரப்படும்.

விவசாயத் தொழில் கார்ப்பரேஷன் மூலம் சுமார் 450 இயந்திரக் கலப்பைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்."

கே. ஏ. மதியழகன்

"நடைபெறவிருக்கும் சட்டமன்றக் கூட்டத்தில், சாகுபடியாளர் பதிவு மசோதா கொண்டுவரப்படும்"

என்று, வருவாய்--உணவுத் துறை அமைச்சர் திரு. கே. ஏ மதியழகன் அவர்கள் பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது :—

"தமிழகத்தில் உணவுத் தானிய உற்பத்தியைப் பெருக்குவதற்காக உழைக்கும் சாகுபடியாளரின் நிலையை உயர்த்துவதில் அரசுக்குப் பெரும் அக்கறையிருக்கிறது.

சாகுபடியாளர் வெளியேற்றப்படுவதைத் தடுக்கப் பயிரிடும் சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டத்தின் ஆயுட்காலம் நீடிக்கப்பட்டிருக்கிறது.

உணவு உற்பத்தி ஆணையாளர் —கடனுதவிக் குழு யோசனைகளுக்கிணங்க—இன்று பரிந்துரைகளை அரசிடம் அளித்திருக்கிறார்; வடிமுனைக் குழாய்கள், பம்பு செட்டுகள் கொள்முதலுக்காக விவசாயிகளுக்குக் கடன்கள் வழங்குவதிலுள்ள சில சட்டச் சிக்கல்கள் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

"பதிவேடுகளில் சாகுபடியாளர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டால் அப்போது கடன்கள் வழங்குவதற்கு அடிப்படை அமையும்" என்று ஆணையாளர் அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கிறது; இதற்கேற்ப, சாகுபடியாளர் பதிவு மசோதா வரும்.

உர விலைகளைப் பழைய நிலைக்குக் கொண்டுவரவும், திரும்பப் பெறப்பட்ட உர உதவி மானியத்தை மீண்டும் அமுலாக்கவும் மத்திய அரசுடன் போராடிவரும் தமிழக அரசுடன் ஒத்துழைக்குமாறு விவசாயிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போதைய நெல் கொள்முதல் விலையைக் குறித்து இந்த இரண்டு நாள் கருத்தரங்கில் ஒருவர்கூடக் குறை கூறவில்லை என்பதிலிருந்தே, அரசின் கொள்முதல் கொள்கைக்கு உள்ள ஆதரவைத் தெரிந்துகொள்ள இயலும்."

அமைச்சர் பதவி...

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வில்லை; மாநிலத்துக்கு மாநிலம் அது மாறுபடுகிறது.

மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து, மக்களவைத் தொகுதிகள் பிரிக்கப்படுகின்றன. இதற்காக தொகுதி நிர்ணயக் குழு கவனம் செலுத்துகிறது.

மக்கள் தொகை அடிப்படை, இந்தியா முழுவதிலுமுள்ள நாடாளுமன்றத் தொகுதிகள் அனைத்துக்கும் பொருந்தி வருகிறது; ஆனால் சட்டமன்றத் தொகுதியின் அடிப்படை அளவு, மாநிலத்துக்கு மாநிலம் மாறுபடுகிறது.

1967 வரையில், தமிழ் நாட்டில், நாடாளுமன்றத் தொகுதி ஒவ்வொன்றிலும், 5 சட்டமன்றத் தொகுதிகள் இருந்தன; 1967 தேர்தலின் போது, அங்கு ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதியும் 6 சட்டமன்றத் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டன.

இப்பொழுதும், மைசூர், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில், நாடாளுமன்றத் தொகுதிக்கு 7 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன.

எனவே, சட்டமன்றத் தொகுதிகளைப் பிரிப்பதில் மாநிலத்துக்கு மாநிலம் அளவு—மக்கள் தொகை போன்ற அடிப்படையில் மாறுபடுகிறது.

எல்லா மாநிலத்துக்கும் பொதுவான முறையில் அடிப்படை வைத்து சட்டமன்றத் தொகுதிகள் பிரிக்கப்பட்டிருந்தால், சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையில், பத்தில் ஒரு பங்கு—பன்னிரண்டில் ஒருபங்கு —என்று அமைச்சர் பதவிகளை வரையறுக்கலாம்; இல்லையாயின் வேறு பொதுவான அடிப்படையில் அமைச்சர் பதவிகளின் எண்ணிக்கையை நிர்ணயிக்க வேண்டும்.

மக்கள் தொகைக் கணக்கை மட்டும் வைத்துப் பார்த்தால், புதுச்சேரிக்கு ½ அமைச்சர் என்று வரும்.

எனவே, குறைந்தபட்சம் மூன்று அல்லது ஐந்து என நிர்ணயிக்கலாம்; அதிக அளவாக 20 அல்லது 30 என்று நிர்ணயித்துக் கொள்ளலாம்."

மணலி ஆலைக்கு மத்திய அரசு கடன்

தண்ணீர் வழங்கும் திட்டத்துக்குப் பயன்படும்

மணலியில் ஏற்படுத்தப்படும் எண்ணெய்த் தூய்மை ஆலையின் நீர்த் தேவையை நிறைவு செய்யத் தமிழகப் பொதுப்பணித்துறையின் ஊற்று நீர்ப்பிரிவினர் ரூ. 80 இலட்சத்தில் திட்டம் என்று செயல்படுத்தவிருக்கின்றனர்.

"இத்தொகையில் ரூ. 50 இலட்சத்தைக கடனாகத் தர இவ்வாண்டுக்கு மத்திய அரசு ஒதுக்கியிருக்கிறது" என்ற தகவலை, பொதுப் பணி அமைச்சர் மு. கருணாநிதி வெளியிட்டார்.

கோ. சி. மணி

எம்.எல்.சி. நிகழ்ச்சிகள்

ஆக. 4 : மாயூரம்; 5: தஞ்சை மாவட்ட மீனவர் பெடரேஷன் கூட்டம்; 6 : குற்றாலம்— மீன் வள ஆலோசனைக் குழுக் கூட்டம்; 9 : ஆடுதுறை; 10, திருமலைராயன் பட்டினம; 11 : காரைக்கால்; 13 : அம்மாபேட்டை, குடந்தை; 16 முதல் 24-வரை : சென்னை.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

4--8--68

மன்னார்குடி

11, 12-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு கீழராச வீதியில்; தலைவர் : ஜி. ஏ. சலாம்; பேசுவோர் : மு. இயலரசன், ப. நாராயணசாமி, கு. பாலகிருட்டிணன், இரா. கணேசன், இரா. தென்னவன், இரெ. சி. இராசகோபால்.

கடலூர் 17-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு திருப்பாப்புலியூர் கம்மியம்பேட்டையில்; தலைவர் : ஆர். சுந்தரம்; பேசுவோர் : இரெ. இளமவழுதி எம்.எல்.ஏ., வெ. கிருஷ்ணமூர்த்தி எம்.பி., கி. கோவிந்தராசன், கே. எம். வேலு சி. இரணியன். (சென்னை தென்னகப் பல்கலைக் குழுவின் 'அண்ணாவின் அரசு' எனும் கலை நிகழ்ச்சி நடைபெறும்,)

பழைய காட்டுப்பாடி

நகர தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர் : இரா. தருமன்; பேசுவோர் : சி. தமிழரசி பி.ஏ., மா. பா. சாரதி எம்.எல் ஏ. ஜி. நடராசன் எம் எல்.ஏ., பி. கே. முனுசாமி, ச. பொன்னரசன், மு. கோதண்டன், கி. கணேசன், கே. எம். எஸ். மணி, மற்றும் பலர்.

பெங்களூர்

காந்தி நகர் தி. மு. க. சார்பில் மாலை 5-30 மணிக்கு 7-வது வட்டம் முனீசுவரன் பிளாக்கில்; தலைவர் : வே. மகிழரசன்; பேசுவோர் : திராவிடமணி, எஸ்.என். நாராயணன், கிள்ளிவளவன் பி.ஏ.பி.எல்., சிவசங்கரன், நா. இராமசாமி, அ. இராமசாமி பி.காம்., ஆர். முனியப்பா, டி. எம். கண்ணன், மு. வெண்முடி வேந்தன்.

குடந்தை

2, 12, 13-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 6-மணிக்கு கும்பேசுவரன் வடக்கு வீதியில்; தலைவர் : அ. சுப்பிரமணியன்; பேசுவோர் : சு. நாவலர் நம்பி, கி. மணியரசன், வி. சின்னத்தம்பி, சு. பத்மநாபன், வழக்கறிஞர் ச. கோதண்டராமன், எம். பழனிச்சாமி எம்.சி., கே. கே. எஸ். வாசன், சை. சர்புதீன், இரா. இராமதாசன், இ. அன்வர் பாட்சா, பி. வி. செயராமன் எம்.சி., எஸ். ஆர். இராதா எம்.சி., கோ. சுப்பராயன், ப. கோதண்டபாணி எம்.சி., ப. நாகராசன், சு. இராசு, இர. முருகேசன்,

'தென்னவின் தூது' நாடகம்

அரியலூர் ஏ. நெடுமாறன் குழுவினரின் 'தென்னவன் தூது' என்ற சரித்திரக் கற்பனை நாடகம், 4—8—68 மாலை 6-30 மணிக்கு சென்னை–ஒற்றைவாடைக் கலை அரங்கில், தி. மு. க. அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல் சி. அவர்கள் தலைமையிலும்—திரு. எச். வி. ஹண்டே எம்.எல் ஏ., துணை மேயர் பவளவண்ணன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும்.

ரோஜா பாக்கு & புகையிலை

REGD. NO. 118331 ROJA

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.